தமிழ்ச் சிட்டு

வெற்றி எதிர் வருமே!

மயக்கு கின்ற கவர்ச்சி கண்டு
மனம் மயங் காதே!—உலகம்
வியக்கும் அரிய செயலைச் செய்ய
உளம் தயங் காதே!

ஊக்கம் தளர்த்தும் ஆசைக் குன்றன்
உணர்வி ழக்காதே!—மக்கள்
ஊக்கம் கொள்ளும் செயலைச் செய்ய
அறிவி ழக்காதே!

தோல்வி கண்டு தூற்றல் கண்டு
துவண்டு போகாதே!—இடையில்
நால்வ கையாய் வரும்து ணைகள்;
நலிந்து சாகாதே!

உண்மை, ஒழுக்கம், ஊக்கம், முயற்சி,
உறுபயன் தருமே!—மனத்தில்
திண்மை வேண்டும்; நேர்மை வேண்டும்;
வெற்றி எதிர் வருமே!

குரல் : 22
இசை : 7

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை :
உருபா: 1-50

தெரிந்து கொள்ளுங்கள்

○ காவிரி நீர் பற்றி ஒரு சிறு விளக்கம்: 1984 வரை ஏறத்தாழ 400 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழக உழவர்கள் கர்நாடகத்திலிருந்து பெற்று வந்தார்கள். அதன் பிறகு அது 350 டி.எம்.சி, 320 டி.எம்.சி. என்று படிப்படியாகக் வந்து கொண்டிருந்தது. பின்னர் முன்னாள் தமிழக முதல்வர் காலத்திலும், அந்நாளைய கர்நாடக முதல்வர் இராமகிருட்டிண எக்டே 300—இலிருந்து 320 டி.எம்.சி வரை நீர் விடுவதாக உறுதி கூறியிருந்தார். இன்று 205 டி. எம். சி. பெறுவதற்கே போராட்டம் நடத்தவேண்டி உள்ளது. ஆனால் பங்காரப்பா 185டி.எம்.சி. தான் விடமுடியும் என்பதில் கண்டிப்பாக உள்ளது போல் தெரிகிறது.

○ தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள், அற நிலையங்கள் ஆகியவற்றிடம் மொத்தம் 4,34,095 குறுக்கம் (ஏக்கர்) நிலம் உள்ளது.

○ எகிப்து நாட்டில் நைல் ஆற்றங்கரையில் ஏறத்தாழ 80 பிரமிடுகள் (Pyramids) உள்ளன. அவை 5000 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட மன்னர்களின் கல்லறைகளாகும். இவற்றுக்குள் வைக்கப்பட்ட மன்னர்களின் சடலங்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகியும் அழுகவோ நாற்றமடிக்கவோ இல்லை. இவற்றின்மீது பூசப்பட்டுள்ள மூலிகை நெய்தான் அதற்குக் காரணம் என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

○ சட்டம், ஒழுங்கு சீர்குலைவுகளைக் காரணம் காட்டி, நடுவணரசு, இதுவரை 80 முறை மாநில அரசுகளைக் கலைத்துள்ளது.

○ நாம் விரும்பிக் குடிக்கும் குளம்பி(காபி) இந்தியாவில் 150 ஆண்டுகளுக்கு முன்னர்தான் புழக்கத்திற்கு வந்தது. இந்தியாவில் குளம்பியை அதிகம் பருகுவோர் தமிழ் நாட்டவர்களே!

○ இந்திய மக்களிடம் ஏறத்தாழ 700 கோடி டாலர் மதிப்புள்ள தங்கம் பயனின்றி முடங்கிக் கிடப்பதாக மதிப்பிட்டிருக்கிறார்கள்.

○ "பத்து ஆசிரியர்களுக்குச் சமம் ஒரு குரு(ஆசாரியன்); நூறு குருக்களுக்குச் சமம் ஒரு தந்தை; ஆயிரம் தந்தைகளுக்குச் சமம் ஒரு தாய்"—என மனுதர்மம் கூறுகிறது.

○ அசாம், மேகாலயம், நாகாலாந்து, மிசோரம், மணிப்பூர், திரிபுரா, அருணாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் 'ஏழு உடன்பிறந்தவள்கள்' ஆகிய(Seven Sisters) என்று அழைக்கப் பெறுகின்றன. இந்தியாவில் பேசும் 1652 மொழிகளில் ஏறத்தாழ 420 மொழிகள் இவ்வேழு மாநிலங்களிலும் வழங்குகின்றன.

○ இந்தியாவின் தொய்வம் (ரப்பர்) ஆண்டுக்கு 2,97,300 கல்லெடை(டன்) உருவாக்கப் பெறுகிறது. ஆனால் இந்தியாவின் தேவை ஆண்டுக்கு 3,61,000 கல்லெடை. மீதி 63,700 கல்லெடை இறக்குமதியாகிறது.

○ நல்லெண்ணெயைப் போல் சூரியகாந்தி நெய்யை அதன் இயல்பான மணத்தில் பயன்படுத்த முடியாது.

○ 'இதுவரை அறிவியல் அறிஞர்களுக்குக் கிடைத்துள்ள—அல்லது அவர்களால் திரட்டப் பெற்றுள்ள புலனங்களின் படி.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 22] (தி.பி. 2024) நளி (அக்-நவம் 93) [இசை-7

பைந்தமிழ் நாடு!
பழம் பெரும் நாடு!

பைந்தமிழ் நாடு பழம்பெரும் நாடு!
ஐந்திணை ஒழுக்கம், அருமைத் தமிழ்மொழி,
துலங்குநல் இலக்கியம் தோன்றிய நாடு!
நலங்கெட இன்று நலிந்தது! அதனை
மீண்டும் புதுக்கிட—மேலுறச் செய்திட
நீண்ட முயற்சிகள் நிகழ்த்திட வேண்டும்!

மொழிநிலை, இனநிலை, பொருள்நிலை, அரசியல்,
பழிசேராத பண்பாடு, கல்வி—
எனும்பல நிலைகளில் இளைஞர்கள் உழைத்தே
இனம்மேம் பாடுற இயங்குதல் வேண்டும்;

இற்றை இளைஞர்கள் எதனிலும் ஊன்றாது
வெற்றுச் சருகுகள் வீசிடும் காற்றில்
அலைந்து திரிதல்போல் அல்லல் உறுவர்!
குலைந்து போகும் குமுகாய நிலைகளைச்
சீர்செய் திடவோ சிறப்புறச் செய்யவோ
ஓர்எள் முனையும் உழைத்திட விரும்பிலர்!

கால்நோ காது, கைநோ காது
மேல்உடை அழுக்குப் படியாமல் உழைக்கவே

இளைஞர் விரும்புவர்; இளமை வீணாக்குவர்;
விளைவெதும் இல்லை; வீண்ஆர வாரம்!
பெண்களைப் போலப் பீடுஇல் லாமல்
கண்களின் கவர்ச்சியே பெரிதென்று கருதி,
மேனி மினுக்குதல், மின்னுடை உடுத்தல்,
கோணி நடத்தல், கொச்சை பேசுதல்,
ஊர்உலா வருதல், ஓங்கிச் சிரித்தல்,
சேர்ந்துகை கோத்துச் சிறுநடை போடுதல்,
கல்லூரிக் கன்னியர், பள்ளிச் சிறுமியர்
செல்கையில் பின்சென்று சிறுசிறு குறும்புகள்
பண்ணுதல்-இவையெலாம் இளைஞர்கள் பழக்கமாய்
நண்ணி வளர்ந்து நாட்டை நலித்திடும்!
திரைப்படப் பெருக்கம் இளைஞரைத் திருப்பி
உரைகள், பாடல்கள், ஒழுங்கிலா நடத்தைகள்
இவற்றுளே இளைஞரை இழுத்துச் சாய்த்திடும்!
அவற்றுளே மூழ்கி வாழ்க்கையை அழிக்கும்
இளமைச் செல்வரை எப்படி மீட்பது?
வளமையாய் அவர்கள் வாழினும், நாட்டுக்கு
ஒருபயன் இன்றி உலுத்தராய் வீழ்வர்!
வருபயன் பற்பல வராமல் உள்ளன!
உண்மையில் இளைஞரை அரசும் ஊக்காமல்
வெண்மையாய் அவரை விளையாட்டு களிலும்,
கழிசடைத் திரைப்படக் காமச் சேற்றிலும்
அழிவுறும் படியே ஆக்குதல் காண்போம்!
நல்ல சிந்தனை, நறும்பல செயல்கள்
வல்ல இளைஞர்க்கு வரும்படி செய்தால்
நாட்டு மக்களின் நலம்பல பெருகும்;
கேட்டுக் குழிகளில் கீழுறத் தள்ளி
மூடிப் போகவே அரசு விரும்பிடும்!
வாடிப் போய்விடும் வருங்காலம் என்றே
எண்ணி வருந்துவார் எத்தனையோ, பலர்;
திண்ணிய இளமையைத் தீமை அழிப்பதா?
அருந்தமிழ் இளைஞரே! அருமை மறவரே!
வருந்தமிழ் நாடு வளர்ச்சி பெற்றிட
எண்ணிப் பார்மின்! எண்ணிப் பார்மின்!
மண்ணில் தமிழினம் மாபெரும் பேரினம்!
அத்தகு நல்லினம் அழிந்துகொண் டுள்ளதே!
எத்தகு பெருமைகள் சிறப்புகள் எல்லாம்
இவ்வினம் பெற்றே இருந்ததை அறிவோம்!
செவ்விய வாழ்க்கையின் சீரெங்கு போனது?
இன்றுநிலை என்ன? இழிநிலை அன்றோ!
குன்றுமண் ஆனதாய்க் குன்றிப் போனது!
இளைஞர் உலகம் எழுந்துமுன் வருக!
இளைஞரைக் காக்க! கேடுகள் சாய்க்க! ○

ஒரு நடைமுறைக் கதை:

மாற்ற முடியவில்லை!

— அதியமான்

ஒரு பெரும் மக்கள் கூட்டம்; இரண்டு மூன்று பேர் தலைமை ஏற்று, அப்பெருங் கூட்டத்தை நடத்திச் சென்றனர். அந்த நாட்டின் மன்னனுடைய அரண்மனை நோக்கி அக் கூட்டம் சென்று கொண்டிருந்தது 'மன்னன் ஒழிக, முடி ஆட்சி வீழ்க, குடியாட்சி மலர்க' என்ற முழக்கங்கள் அந்தத் தலைநகரையே குலுக்கி உலுக்கியது. மக்களின் ஒலிப்பு அரண்மனைக்குள்ளிருந்த மன்னனின் காதுகளில் கடுமையாக ஒலித்தது. அவன் அதிர்ச்சி-யுற்றான். உடனே அமைச்சரை அழைத்தான்;

'அமைச்சரே! என்ன ஒரே கூச்சல், குழப்பங்கள்!' எனக் கேட்டான்;

'ஆமாம் கிளர்ந்தெழுந்த மக்கள் நம் அரண்மனை நோக்கி, வந்துகொண்டிருக்கிறார்கள். மன்னனாட்சி வேண்டாவாம்'

'அப்படியானால் எந்த மன்னன் ஆட்சி வேண்டுமாம்' என்று அதிர்ச்சியில் கேட்டான் மன்னன்.

அமைச்சர் விளக்கினார், 'எந்த மன்னன் ஆட்சியும் வேண்டா-வாம். இனி நாட்டை மக்களே ஆளப் போகிறார்களாம்; மன்னன் முடி துறந்து மக்களோடு மக்களாக ஆகிவிடவேண்டும் என்று கூறுகிறார்கள். அதனாலேயே 'மன்னனாட்சி ஒழிக, முடியாட்சி வீழ்க,குடியாட்சி மலர்க' என்று உரத்த ஒலி மக்களால் எழுப்பப் படுகிறது' என்று சுருக்கமாக மக்களுடைய எண்ணங்களை மன்ன-னிடம் எடுத்துக் கூறினார் அமைச்சர்.

''இந்த மக்களைப் படை கொண்டுத் தாக்கி இக் கூட்டத்தை நடத்தும் தலைவர்களைச் சிறை வைத்து வன்கொலை செய்துவிட வேண்டும்! என்ன சொல்லுகிறீர் அமைச்சரே?' என்று சினம் பொங்கக் கேட்டு மீசையை முறுக்கினான் மன்னன்;

'மக்களுடைய வலுதான் பெரியது. நம் படையில் இருப்ப-வர்களும் மக்களிடமிருந்து வந்தவர்கள்தாமே! அப்படி ஓர் அடக்கு முறையைக் கையாண்டால், இன்னும் கிளர்ச்சி வலுத்து, நாடு முழுவதும் படர்ந்து,இதைவிடப் புரட்சி மிக வலுப்பெறும்; மக்களுடைய வலுவே பெரியது, இதுதான் வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடம், மன்னா!' என்றார் அமைச்சர்;

''அப்படியானால் இதற்கு என்ன செய்யலாம்? எப்படியும் இவர்களை அடக்க ஒரு வழியைக் கண்டு பிடித்து ஆக வேண்டும். ஆட்சியை மக்களிடம் கொடுத்துவிட்டு நாம் எங்கே போவது? மேலும் மக்கள் எப்படி நாட்டை ஆளமுடியும்; இ'து அறியாமை என்றே நான் கருதுகிறேன்'' என்று கூறிச் சிந்திக்கும்படி அமைச்சரைக் கேட்டான் மன்னன்.

''மன்னா இக்கூட்டத்தை நடத்திவரும் தலைவர்களை அழைத்து அவர்களிடம் பேசிப் பார்க்கலாம் என்று கருதுகிறேன்; முடி-

யாட்சியில் மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பிற்கு என்ன காரணியம் என்று தெரிந்து, அக் குற்றங்களை நாம் நீக்கி, மீண்டும் மன்னன் ஆட்சியே நீடிக்கவேண்டிய ஒப்பந்தத்தை செய்து கொள்வதே நல்லதென்று நான் நினைக்கிறேன்' என்றார் அமைச்சர்.

"சீ: நான் எடுத்த படையெடுப்புகள் எத்தனை? எப்படிப் பட்ட வீரர்களையெல்லாம் என் வாளுக்கு இரையாக்கிக் கொன்று விட்டு மாமன்னன் என்ற புகழை ஈட்டியுள்ளேன். நானா இந்த மக்கள் தலைவர்களைச் சந்திப்பது? இதைவிட இழுக்கு எனக்கு வேறொன்றுமில்லை. அமைச்சரே! நம் குதிரைப் படையை இந்த முட்டாள் மக்கள் மீது ஏவிக் கலைத்துவிட ஆணையிடுகிறேன்' என்று வீறுகொண்டு பேசினான் மன்னன்.

"மன்னா! வேண்டாம். உங்கள் எண்ணத்தின் பின்விளைவு பெருந் துன்பத்தைத் தந்து நிற்கும். நம் நாட்டு மக்கள் மீதே நாம் படை எடுப்பது இழுக்கு மன்னா; உலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்கும். மன்னன் ஆட்சிக்கு உடனே விடை கொடுத்து அனுப்பி விடுவார்கள்; வேண்டாம், மன்னா வேண்டாம்!' என மறுப்புக் கூறினார் அமைச்சர்.

அமைச்சர் கூற்றை மதிக்காமல் மன்னன் அதிகாரச் செருக்கில் படைகளை மக்கள் மீது போர்த்தொடுக்க ஆணையிட்டான். படை மக்கள்மீது பாய்ந்தது. எங்கும் அரத்த வெள்ளம்! ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், நாய்களும், கழுதைகளும் கோழிகளும், குஞ்சுகளும் செத்து மடிந்தன. எங்கும் ஓலம்! அவலம்! கணவனை இழந்த பெண்கள்! பெற்றோரை இழந்த குழந்தைகள்! இப்படிப் பல கொடுமையான காட்சிகளைக் கண்ட மக்கள் வெகுண்டனர். எவன் ஆண்டால் என்ன? என்றிருந்த கூர்கெட்டதுகளும் அடிபட்டதும் சினம் பொங்க மன்னனுடைய ஆட்சியை வெறுத்து புரட்சி செய்தனர். அடிப்பட்ட பின்னரே ஆட்சி மாற்றத்தை ஞாயம் என்று அறிந்து அனைத்து மக்களும் சேர்ந்து மன்னனை ஒழித்துக் கட்டினர்.

முன்னர் இருந்த மன்னனுடைய ஆட்சியில் மக்கள் தலைவர்கள் எனப்பெறுவோர் கூறிவந்த குற்றங்கள் பற்பல. அவை: "மன்னன் தன் நலங்கருதி நாட்டின் செல்வங்களையெல்லாம் செலவிடுகிறான். அதிகாரிகள் மன்னனுடைய இசைவில்லாமலே வரி என்ற பெயரால் பெரும் பொருள்களை மக்களிடமிருந்து பிடுங்கிக் கொள்கிறார்கள். எதற்கெடுத்தாலும் கையூட்டு! குடிக்க மக்களுக்குத் தண்ணீரில்லை; கண்ணீர் விடுகிறார்கள். நாட்டில் உள்ள சுட்டமண் கோயில்களெல்லாம் கோபுரமாக்கப் படுகிறது. அங்கு ஐந்து கால ஆறுகால வழிபாடுகள் எனக் கூறி நாட்டிலுள்ள பால் வளத்தையெல்லாம் சிலைகளிலூற்றிச் சீரழிக்கிறார்கள். தமிழர்கள் கட்டிய கோயில்களில் தமிழர்களை வெளியேற்றிவிட்டுப் பார்ப்பனர்களை அமர்த்தி வழிபாடு செய்ய வைத்துவிட்டான் மன்னன். அங்கு பார்ப்பனர்களுடைய மொழி

சமற்கிருதத்தை வழிபாட்டு மொழியாக்கி பார்ப்பனரிடம் கைகட்டி அவனுடைய கால்களில் தமிழ் மன்னவனும் அமைச்சர்களும் விழுந்து அடிமையாகித் தமிழர்களையும் அடிமையாக்கி விட்டான். சாலைகளில் மாந்தர்கள் நடக்க முடியவில்லை, எங்கும் மேடு பள்ளங்கள்; குழிகளில் தண்ணீர் தேங்கி மக்களுடைய உடல்நலத்தைக் கெடுக்கும் நச்சுப் பூச்சிகள் குடிவாழ்க்கை நடத்துகின்றன. கல்வி நிலையங்கள் யாவும் பாழாய்க் கிடக்கின்றன. அங்கு இரவில் கழுதைகள் சேர்ந்து காதல் வாழ்க்கையை நடத்துகின்றன. பணக்காரர்களுக்கே படிக்கவேண்டிய ஏந்துகளை மன்னன் செய்து கொடுக்கிறான். ஏழைகள் படிக்க முடியவில்லை; வேலை இல்லாமல் திண்டாடும் இளைஞர்களைப் பற்றி மன்னனுக்குக் கவலையே இல்லை. அவன், அந்தப்புரத்திலே முழு நேரத்தையும் பலநாட்டுக் கன்னியர்களுடன் கூடிக்குலாவிக்கொண்டுகாலத்தை ஓட்டுகிறான். அவர்களுக்கு அரசுப் பணத்தில் பெரும் பகுதியைக் கொடுக்கிறான். விலை மகளிருக்கு ஆட்சியில் அதிகாரம் பண்ண இடம்கொடுக்கிறான். அறிஞர் பட்டங்களை கொடுத்து அவர்களைப் புகழும்படி மக்களைக் கட்டாயப்படுத்துகிறான்; மக்கள் பணத்தை மக்களை வளப்படுத்தும் தொழில்களுக்குப் பயன்படுத்தாமல், தன்னுடைய ஆடம்பரச் செலவுகளுக்கே பயன்படுத்துகிறான். மன்னன் உலா வரும்போது கோடி கோடியாகப் பணத்தைச் செலவிட்டு ஆடம்பரமாக அலைகிறான். மக்களுடைய வாழ்க்கை வளம் உயர வழி இல்லை. எனவே மன்னன் ஆட்சியை மாற்றி மக்கள் ஆட்சியை மலரச் செய்தால் அவ்வாட்சியில் மக்களுடைய நலனே முகாமையானதாகக் கருதி ஒரு சட்டப் பேரவையை அமைத்து மக்கள் தேர்வுசெய்யும் உறுப்பினர்களைக் கொண்டு நாட்டை நல்ல முறையில் ஆளமுடியும்'' எனப் பேசி மக்கள் ஆட்சி என்றபெயரால் குடியாட்சி ஆளுமைக்கு வந்தது.

ஆட்சியை நடத்த அரசியல் சட்டத்தை இயற்றிக் கொண்டார்கள். ஒரு குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுத்து அமர்த்திக் கொண்டார்கள். முடியாட்சியை விரட்டிய சில அரசியல் கட்சிகளை வைத்துக் கொண்டு தேர்தலையும் நடத்தி மக்களிடமிருந்து ஒப்போலைகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தார்கள். மக்கள் ஆட்சி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் ஆளுகிறோம் என்றும் பறைசாற்றினார்கள்; மக்களிடமிருந்து பல வழிகளில் வரிப் பணத்தைத் திரட்டினார்கள். நாட்டுக்குப் பலநலத் திட்டங்களெனக் கூறி அரசுப் பணத்தையெல்லாம் ஆட்சியாளர்கள் சுருட்டிக் கொண்டார்கள். திட்டங்களை நிறைவேற்றப் பணங் காணவில்லையென்று அயல் நாட்டில் இருந்து கோடிகோடியாகப் பணத்தை வட்டிக்கு வாங்கினார்கள். வட்டிகளைக் கட்ட மேலும் போடாத வரிகளையெல்லாம் போட்டு மக்களைப் பிசைந்து பிழிந்தார்கள். வாங்கிய வெளிக்கடனுக்கு வட்டிகளைக் கொடுக்க மேலும் வட்டிக்குப் பணத்தை வேறு நாடுகளிலிருந்து கடன் வாங்கினார்கள்; மக்கள்

ஆட்சித் திட்டங்கள் நிறைவேறினால் ஒட்டிக்கிரட்டி வருவாய் வரும் என புரட்டுருட்டாகப் பேசினார்கள்.

முடியாட்சியில் என்னென்ன குறைகளைச் சொன்னார்களோ அக் குறைகளைக் காட்டிலும் பலமடங்கு மிகுதியாக ஊழல்களைச் செய்தார்கள். ஆளுங் கட்சிகள் கொள்ளையடிப்பதைக் கண்ட இதரக் கட்சிகள் ஆட்சியில அமர மக்களை ஏமாற்றும் வழிகளைச் சிந்தித்தார்கள். ஆளுபவர்மீது ஊழல் குற்றச் சாட்டுகளைக் கூறினார்கள். ஆளும் கட்சிகளில் பதவி கிடையாமல், பணம் சேர்க்க முடியாமல் இருந்தவர்கள் வேறு கட்சிக்கு மாறினார்கள்; அல்லது வேறு கட்சிகளைத் தோற்றுவித்து, மக்களிடம் தங்களைத் தேர்தலில் ஆளுங் கட்சியாக்க மன்றாடினார்கள். மக்களும் இந்தப் புளுகர் பேச்சைக் கேட்டு மன்னன் ஆட்சியை விரட்டினோம் இனி வேறு வழியில்லையென்று ஒவ்வோர் கட்சியாகத் தேர்தலில் வெற்றியடையச் செய்து ஆட்சியில் அமர்த்தினார்கள். ஆளுங் கட்சியானவுடன் மக்களை அவர்கள் மொட்டையடித்தார்கள். மக்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்கவில்லை.

கையூட்டுக்கு ஆட்சியாளர்களும அதிகாரிகளும் நன்கொடை எனப் பெயரிட்டுப் பிடுங்கினார்கள். மக்களை வறுமைக் கோட்டுக்குக் கீழ் தள்ளிவிட்டு, மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் போய் விட்டதாய் புள்ளிக்கணக்கைக் காட்டினார்கள். தண்ணீர் கேட்டால் சிறை கிடைத்தது. சாலை கேட்டால் உதை! வேலை கேட்டால் கொடுங்கோலைக் காட்டினார்கள். பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதாய்க் கூறியவர்கள் சுட்ட மண்ணைப் போட்டுவிட்டுக் கோயில்களுக்குக் கோபுரம் கட்டிக் குடமுழுக்கு நடத்தி மக்களை மடியச் செய்தார்கள். கோயில்கள் முன்பைவிட மிகுதியாக வழிபாடுகள், முன்போலவே பார்ப்பனர்களே குடியாட்சியிலும் மேலாண்மையைச் செய்தார்கள். அங்கு தமிழுக்கு இடமில்லை. சமற்கிருதமே கோலோச்சியது. கோயில்களில் வழிபாடு செய்வோனே (பூசாரி) திருடினான். மன்னன் காலத்தில் கோயில்களில் குவித்து வைத்திருந்த விலைமதிக்க முடியாத பொருள்களையெல்லாம் திருடினார்கள். சில சிலைகளுக்குக் குண்டி இல்லாமல் சுரண்டிக் கொண்டார்கள். கிழட்டு அமைச்சர்களில் சிலர் கன்னியர்களை மறுமணம் செய்துகொண்டார்கள். அமைச்சர்களே கற்பழித்ததாய்ச் செய்திகள் வந்தன. முன்பு அரசன் ஆடம்பரமாக உலா வந்தான் என்று சொன்ன அரசியல் வழக்கர்கள் ஆட்சிக்குப் போனதும் ஆடம்பரமாக உலாவர மலர்ப்பாதையில் நடந்தனர். அமைச்சர்கள் பன்னீரில் கைகழுவினர். மக்கள் தண்ணீரில்லாமல் தட்டழிந்தார்கள்.

அரசர் காலத்தில் பதவி உயர்வு வேலைக்கு அமர்த்தம் திறமை கூர்மையாகக் கவனிக்கப்பட்டன, இப்போது பணம் தகுதியை உறுதி செய்தது. வேலைகளும் பதவி உயர்வுகளும் பணத்தை வாங்கிக் கொண்டு செய்தனர். அறிவிற்குக் குடியாட்சியில் மதிப்பில்லை. மக்களுக்கு அறிவை வளர்க்கப் பணியாற்றிய அறிஞர்களை

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம்)

குங்குமப்பூ.

குங்குமப்பூ பல நோய்களைக் குணப்படுத்தக்கூடியது; குங்குப்பூவை, வட இந்தியாவில் பணக்காரப் பூ என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவார்கள். குங்குமப் பூவின் தாயகம் தென் ஐரோப்பா: இ'து இந்தியாவிலேயே சம்மு-காசுமீர் பள்ளத்தாக்கில்தான் அதிகம் விளைகின்றது.

குங்குமப்பூவின் இதழ்தான் மருந்துக்குப் பயன்படுகிறது என்று சிலர் நினைக்கின்றனர். இது தவறு. பூவின் நடுவே காணப்படுகின்ற சூல்முடிதான் மருந்துக்குப் பயன்படுகிறது. ஒரு பவுண்டு குங்குமப்பூ உருவாக்குவதற்கு இரண்டு இலக்கத்து இருபத்து ஐந்தாயிரம்(2,25,000)முதல் ஐந்து இலக்கம்(5,00,000) வரை சூல்முடி தேவை; இவ்வளவு சூல்முடி எடுப்பதற்கு 75 ஆயிரம் முதல் ஓர் இலக்கம் பூக்கள்வரை தேவைப்படும். இந்த இலக்கக் கணக்கான சூல்முடிகளைக் காய வைத்து பொடி செய்து பின் குங்குமப் பூவாக விற்பனைக்கு அனுப்புகிறார்கள்.

இசுப்பெயின் நாட்டில் விழாக் காலங்களில் அரிசியோடு குங்குமப்பூவைச் சேர்த்துச் சமைப்பதைப் பெருமையாக நினைக்கின்றனர் அங்கு வாழும் மக்கள். பிரான்சில் மீன் மற்றும் அசைவ உணவைச் சமைக்கும்போதும், ஈரொட்டி உருவாக்கும் போதும் குங்குமப் பூவைப் பயன்படுத்துகின்றனர்.

இதன் மருத்துவக் குணங்கள் எண்ணில் அடங்காதவை; குங்குமப் பூவை மூன்று ஆண்டு வரைகூட வீட்டில் வைத்திருக்கலாம். ஆனால் ஈரக் கரண்டியோ, கைவிரல்களோ படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

குங்குமப்பூவைத் தங்கத்திற்கு இணையாகக் கருதுகிறார்கள் வணிகர்கள். ஒரு மாத்திரி (ஒரு கிலோ) குங்குமப்பூவின் விலை 17,000 உருபா. —மு.சிவாசி; நன்றி. 'தினமணிக் கதிர்';

(முன் பக்கத் தொடர்ச்சி)

முடக்கச் சிறையில் அடைத்து; அவர்களின் முற்போக்குப் பணிகளை அடக்கினர். பேச எழுத உரிமை மறுக்கப்பட்டது. மக்களைப் பாதுகாக்க முடியவில்லை. எங்கும் குண்டு வெடிப்பில் மக்கள் மாண்டனர். சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படவில்லை. குடியாட்சி அமைச்சர்கள் தங்களுக்குச் செல்வம் சேர்ப்பதிலேயே கவனத்தைச் செலுத்தினர். மக்களைப் பற்றி இந்த அமைச்சர்களுக்குக் கவலையே இல்லாமல் போனது;

முடியாட்சியில் கண்ட ஊழல்களைவிடப் பலமடங்கு ஊழல்கள் குடியாட்சியில் பெருகிக் கிடந்தன. மக்களில் சிலர் ஞாயம் கேட்டனர்; கேட்டவர்களை சிறையில் அடைத்தார்கள்; சுட்டும் தள்ளினார்கள்; அரசனுடைய செயலைவிட குடியாட்சியில் கொடுமைகள் மிகுந்தன. மக்களுக்குச் சிந்திக்கும் ஆற்றலை முடக்கக் கலைகளைப் பயன்படுத்தினர், மக்கள் மடயர்களானார்கள்; முடியாட்சி ஊழல்களைக் குடியாட்சியர் மாற்ற முடியவில்லை; மக்கள் மாறித் துன்புற்று அலைகின்றனர்; ○

ஒட்டி.

—க. குழந்தைவேலன்

ஒரு நாள் அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வரும் பொழுது ஒரு வெள்ளிரும்புக் குவளை (Ever-silver Tumbler) வாங்கி வந்தேன். அதில் கடையின் பெயர்ச் சீட்டு மினுக்கு வண்ணத்தில் ஒட்டப்பட்டிருந்தது. இரண்டு அகவை நிரம்பி மழலைச் சொல் மாறாத என் மகனை அது பெரிதும் கவர்ந்தது போலும்! விரைவில் வாயாப் பசையிட்டு ஒட்டியிருந்த அந்த பெயர் வில்லையைப் பிரிப்பதும் ஒட்டுவதுமாக விளையாடிக் கொண்டிருந்த அவன் சிறிது நேரங் கழித்து உறங்கிவிட்டான். நான் அக் குவளையை வாங்கி வைக்கின்றபொழுது அந்தப் பசைப் பெயர்ச் சீட்டைப் பிரித்து எறிந்து விட்டு வைத்துவிட்டேன்.

இரவு உறங்கி எழுந்த என் மகன் காலையில் குவளையைத் தேடி எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, ,எங்கேப்பா? அந்த ஒட்டி?'' என்றான்.

எனக்கு விளங்கவில்லை. ''எந்த ஒட்டியப்பா?'' என்றேன்.

''அதுதாம்பா அந்த ஒட்டி!

என் மரமண்டைக்கு ஏற்வில்லை. ஒத்துக் கொண்டால் சரி என்கின்றீர்களா?

''எது அப்பா?' என்று மீண்டும் வினவினேன்.

அவன் நேற்றுப் பசையிட்ட பெயர்வில்லையை எப்படிப் பிரித்துப் பிரித்து ஒட்டினானோ அப்படியே கையால் சைகை காட்டி; ''அந்த ஒட்டி'' என்றான்.

எனக்கு ஒரே மகிழ்ச்சி—ஆர்க்கிமிடிசு போலக் 'கண்டேன் கண்டேன்' என்று ஓடும் நிலையை அடைந்தேன். நல்ல காலம் ஓடவில்லை; ஓடி இருப்பின் தெருவில் உள்ளவர்களெல்லாம் என்னைக் கல்லால் அடித்திருப்பர்—தப்பினேன்!

இன்று நம் மக்களிடம் பெரு வழக்காக ஒட்டிக் கொண்டு, தமிழ்ச் சொல் காணவியலா அந்தப் பசைச் சீட்டுக்கு மழலைத் தமிழ் கிடைத்துவிட்டது. அதனால்தான் தமிழ் என்றும் இளமை-யானது என்கிறார்களோ!

ஒட்டுப் பொட்டு, 'ஒட்டுச் சீட்டு'...போன்று கரணிய அடிப்படையில் சொல் வழக்கு அருகிய நிலையில் வழங்கினும் எழுத்-தறியா வாயெல்லாம் ஒட்டித் திரிந்த ''sticker'' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு தமிழ் மரபையொட்டி அமைந்துள்ள 'ஒட்டி' போதுமே!

○ ஒருவர்க்கு ஏதாவது ஒரு காரணத்திற்காக நோபல் பரிசு வழங்கவேண்டும் என்றால் அவரை, ஏற்கனவே நோபல் பரிசு பெற்றவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நோபல் பரிசுக் குழுவின் 5 உறுப்பினர்கள் ஆகியோர் பரிந்துரைக்க வேண்டும்.

உணவுப் பொருள்கள் பற்றிய அடிப்படை உண்மைகள்.

கனிமச் சாரங்கள்:

உடலின் எல்லா வேலைகளும் சீராக நடைபெற மாவுச்சாரம், புரதச்சாரம், கொழுப்புச்சாரம் ஆகியவற்றுடன் சுண்ணயம் (கால்சியம்), எரியம் (பாஸ்பரஸ்), உவரம் (சோடியம்), சாம்பரம் (பொட்டாசியம்) மக்னீசியம், இரும்பு, கந்தகம், பாசிகம் (குளோரின்) அயோடின், ஃபுளாரின், தாமிரம் போன்ற கனிமங்களும் வேண்டும். இவை மிகக் குறைந்த அளவிலேயே நமக்குத் தேவை என்றாலும் அவை இல்லாதிருந்தால் உடலுக்குப் பல கேடுகள் விளையலாம். இவற்றுள் முகாமையானது சுண்ணயம்.

சுண்ணயம்:

சுண்ணயம்தான் எலும்புகள், பற்களின் வளர்ச்சிக்கு மிக இன்றியமையாத துணையாகிறது. மேலும் அரத்தம் உறைதலுக்கும் இதன் உதவி தேவை. உடம்புக்குத் தேவையான சுண்ணயத்தை அளிப்பதில் பாலும் பாலாடையும்தாம் மிகச் சிறந்தவை. நூறு 'கிராம்' பாலில் 0.12 கிராம் சுண்ணயம் உள்ளது.

பச்சைக் காய்க்கறிகளிலும், கேழ்வரகிலும், முட்டையிலும் ஓரளவு சுண்ணயம் உள்ளது. காய்கறி மூலம் கிடைக்கும் சுண்ணயத்தை விட பாலில் உள்ள சுண்ணயம் மிகச் சிறந்தது.

எரியம்:

அடுத்து முகாமையான கனிமச்சாரம் எரியம். அ்து எலும்பு-நரம்பு, பற்கள், தசைகள், ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. மாந்தனுக்குச் சராசரித் தேவையான ஒருகிராம் எரியம் பால், முட்டை, தவசங்கள், காய்கறிகள், இறைச்சி, மீன் முதலியவற்றின் மூலம் கிடைத்துவிடுகிறது.

இரும்பு:

இரும்புச் சாரம் அரத்தத்தில் செவ்வணுக்களை உருவாக்கும் முகாமையான பணியில் ஈடுபட்டுள்ளது. செவ்வணுக்களில் மிக அதிகமாகக் காணப்படும் அரத்த நிறமியில் இவ்விரும்புச் சாரம் உள்ளது. உடம்பில் மொத்தமாக 4.3 கிராம் இரும்புச் சாரம் உள்ள-தென்றால் அதில் 70—75% அரத்தத்தில் உள்ள செவ்வணுக்களில் தான் உள்ளது. 15—20% சாரம் ஈரல், கல்லீரல், எலும்பு மாவு (மச்சை—Marrow) ஆகியவற்றிலும் 3 5% தசைப்பகுதியிலும் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. அரத்தத்தில் உள்ள செவ்வணுக்களை உருவாக்கவே இரும்புச் சாரம் மிகுதியாகப் பயன்படுவதால் அது குறைகின்ற பொழுது அரத்த'சோகை' ஏற்படும்.

பருப்பு வகைகள், கீரைகள், காய்கறிகள், பழங்கள், கொட்டைகள், தவசங்கள். முட்டையின் மஞ்சள் கரு, வெல்லம், உலர்ந்த கொடிமுந்திரி (திராட்சை) பேரீச்சம்பழம் முதலியவற்றில் இரும்புச் சாரம் சிறிதளவே உள்ளது.

பிற கனிமங்கள்:

மெக்னீசியம் நரம்புகள், தசைகள், இவற்றின் தொடு உணர்ச்சியை அதிகப்படுத்துகிறது. இது பசுமையான காய்கறிகளிலும் கீரைகளிலும் அதிகமாக இருக்கிறது.

உவரமும் பாசிகமும் நம் உடலுக்கு உப்பிலிருந்து கிடைக்கின்றன. ஃபுளோரின், தாமிரம், கோபால்ட், மாங்கனீசும், துத்தநாகம் (Zinc) சாம்பரம் ஆகியன, நாம் உண்ணும் உணவிலிருந்தே நமக்குத் தேவையான அளவு கிடைத்து விடுகின்றன.

உயிரூட்டச் சாரங்கள்:

இவை தவிர மாந்தன் உயிர்வாழ பல வகையான உயிரூட்டச் சாரங்களும் தேவை. இவை 'ஏ', 'பி', 'சி', 'டி', 'ஈ', 'கே' என்னும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. நம் உடலுக்கு மிகக் குறைந்த அளவிலேயே தேவைப்படுகின்றன. ஆனாலும் அவை குறையும் போது உண்டாகும் விளைவுகள் அதிகம். குறிப்பிட்ட ஒவ்வொரு நோய் ஏற்படுகிறது.

'ஏ' உயிரூட்டச் சாரம்:

பயன்: 'ஏ' உயிரூட்டச் சாரம் உடலின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் கண்பார்வைக்கும் மிகவும் உதவுகிறது.

நோய்: இது உணவில் குறைந்தால் தோல் வறண்டு சொர சொரப்பாவதுடன் கண்ணில் உள்ள கருவிழிப்படலம் காய்ந்து அதில் புண்ணும் உண்டாகிறது. மேலும் கண்எரிச்சலும் இரவு நேரம் பார்வை மங்கும் மாலைக்கண் நோயும் ஏற்படுகின்றன. அதோடு நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைந்து காயங்கள் மிகத் தாழ்த்தமாகவே சரியாகும்.

கிடைக்கும் பொருள்கள்:

இது பால், வெண்ணெய், முட்டையின் மஞ்சள்கரு, கல்லீரல் மீன்நெய் ஆகிய விலங்கினப் பொருள்களில் அதிகமாக உள்ளது. நிலைத்திணை உணவில் மாம்பழம், பப்பாளி 'காரட்', முட்டைக்கோசு, கீரை, முள்ளங்கி, கறிவேப்பிலை, புதினா, மஞ்சள் பூசணி, பச்சைப் பட்டாணி', பச்சைமிளகாய், சோளம், சர்க்கரை வள்ளிக்கிழங்கு, தக்காளி, வாழைப்பழம் ஆகியவற்றில் உள்ளது.

'பி' (B) உயிரூட்டச் சாரக் குழுவில் பல வகைச் சாரங்கள் உள்ளன.

பி I அல்லது தையாமின்:-

பயன்:- நம் உணவிலுள்ள மாவுப் பொருளை உடலுக்குப் பயன்படுத்தும் பணியில் ஈடுபடுகிறது.

நோய்:- பசியின்மை, வலுவின்மை, வீக்கம், நாடித்துடிப்பு வளி முதலியன ஏற்பட்டு நரம்புமண்டலம் தாக்கப் பட திமிர் நோய் (beri beri) ஏற்படும்.

கிடைக்கும் பொருள்கள்: இது முட்டை, கீரைகள், பச்சைக் காய்கறிகள், பால், மீன், இறைச்சி, கொட்டைகள், பழங்கள் ஆகியவற்றில் உள்ளது. தீட்டப்பட்ட அரிசியில் இச்சாரம் நீங்கி விடுகிறது. ஆனால் புழுங்கலரிசியில் தவிடு அரிசியோடு ஒட்டிக் கொள்வதால் நீங்குவதில்லை.

குறிப்பு:- இது நீரில் கரையும் தன்மை கொண்டது. வெப்பத்தால் தாக்கப்படுவதில்லை. எனவே உணவுப் பொருள்களை வேகவைக்கும்போது அப்படியே உள்ள இச்சாரம் வடிக்கும்போது வெளியேறி விடலாம். அதனால் வேக வைத்த பின் வடித்த நீரைக் குடிப்பதன் மூலம் இச்சாரத்தை இழக்கமலிருக்கலாம்.

B 2 (ரிபோஃ பிளேவின்)

பயன்:- உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது.

நோய்:- இதன் குறைவினால் வாய் ஓரங்களில் வெடிப்பு ஏற்பட்டு நாக்கில் எரிச்சலும் புண்ணும் உண்டாகிறது.

பொருள்கள்:- பால், மீன், இறைச்சி, ஈரல், முட்டை, அரிசி, கோதுமை, தயிர், மோர், சோறு புளித்தநீர். புளித்த இட்டளிமாவு, பச்சைப்பட்டாணி, முட்டைக்கோசு, காரட்டு, உருளைக் கிழங்கு ஆகியவற்றிலும் பாலைத் தயிராக மாற்று-கின்ற, மாவைப் புளிக்க வைக்கின்ற ஈச்ட்டு(Yeast)-இலும் உள்ளது.

(தொடரும்)

நன்றி: மருத்துவர் ச. ஞானசௌந்தரி அவர்கள்
(நூல்: மணப்பேறும் மகப்பேறும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்

14. நிகர்—(NIGER)—குடியரசு

நிலப்பரப்பு : 12,67,000 ச.அ.மா
மக்.தொ : 62,70000
மக்.தொ.பெ : 2.9%
மக்.வா.எ : ஆண்: 41, பெண்: 44 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 5%
தலைநகர் : நியாயம்
மொழி : பிரெஞ்சி, ஹாசா, டிசர்மா
நாணயம் : CFA—பிராங்க் = 100 சென்டிம்கள்

15. சாட் (CHAD)—குடியரசு

நிலப்பரப்பு : 12,84,000 ச.அ.மா
மக்.தொ : 51, 20,000
மக்.தொ.பெ : 2 %
மக்.வா.எ : ஆண்: 39, பெண்: 41(ஆண்டுகள்)
எழுதறிவு : 15%
தலைநகர் : ட்ஜமீனு
மொழி : பிரெஞ்சு, அரபிக்
நாணயம் : CFA—பிராங்க் = 100சென்டிம்கள்

16. சுதான் (SUDAN)—குடியரசு

நிலப்பரப்பு : 25,05,813 ச.அ.மா
மக்.தொ : 21 440 000
மக்.தொ.பெ : 2.8%
மக்.வா.எ : ஆண்: 46, பெண்: 48 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 2 0%
தலைநகர் : அல்கார்தும்
மொழி : அரபிக், பல மொழிகள்
நாணயம் : சுதானீசு பவுண்ட் = 100பியாஸ்டர்

17. சியாரா லியோனி (SIERRA LEONE)—குடியரசு

நிலப்பரப்பு : 7,33,26 ச.அ.மா
மக்.தொ : 33,50,000
மக்.தொ.பெ : 2.6%
மக்.வா.எ : ஆண்: 44, பெண்: 48 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 15%
தலைநகர் : ஃபிரீடவுன்
மொழி : ஆங்கிலம், உள்ளூர் மொழிகள்
நாணயம் : லியோனி—100 சென்ட்கள்

18. லிபிரியா (LIBERIA)—குடியரசு

நிலப்பரப்பு : 11,1,369 ச.அ.மா.
மக்.தொ : 1,90,0000
மக்.தொ.பெ: 3.5%
மக்.வா.எ : ஆண்: 52, பெண்: 54 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 24%
தலைநகர் : மரன்ரோவியா
மொழி : ஆங்கிலம்
நாணயம் : லிபிரியன் டாலர் = 100 செண்ட்கள்

19. எதியோபியா (ETHIOPIA)—

நிலப்பரப்பு : 1,22,19,000 ச.அ.மா.
மக்.தொ : 4,20,20,000
மக்.தொ.பெ: 1.8%
மக்.வா.எ : ஆண்: 38, பெண்: 41(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 8%
தலைநகர் : அட்டிஸ் அபாபா
மொழி : அம்ஆரிக், அரபிக், ஆங்கிலம்
நாணயம் : எதியோபியன் பிர்—100 செண்ட்கள்

20. டிஜிபோடி (DJIBOUTI)—குடியரசு

நிலப்பரப்பு : 2,3,000 ச.அ.மா.
மக்.தொ : 3,40,000
மக்.தொ.பெ : 2.2%
மக்.வா.எ : 50 ஆண்டுகள்
எழுத்தறிவு : 20%
தலைநகர் : டிஜிபோடி
மொழி : அரபிக், பிரெஞ்சு
நாணயம் : டிஜிபோடி பிராங்க் = 100செண்டிம்கள்

21. ஐவரி கோஸ்ட் (IVORY COAST)—குடியரசு

நிலப்பரப்பு : 3,22, 464 ச.அ.மா.
மக்.தொ : 85,00,000
மக்.தொ.பெ : 3.5%.
மக்.வா.எ. : ஆண்: 44, பெண்: 48(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 24%
தலைநகர் : அபிட்ஜான்
மொழி : பிரெஞ்சு, மண்வாழ் மக்கள் மொழி,
நாணயம் : CFA பிராங்க் = 100 செண்டிம்கள்

(தொடரும்

இளைஞர்கள் எங்கே போகிறார்கள் ?

மேலை நாடுகள் எல்லாம் நிலாவுக்கும், செவ்வாய்க்கும் செல்வதற்குக் கருத்தரங்கம் நடத்திக்கொண்டிருக்கும்போது, நாம் பட்டி மன்றப் பாணியில் பேசிக் கொண்டிருப்பது நமக்கு வெட்கமாகவும் துயரமாகவும் இருக்கிறது.

இந்தியாவின் இன்றைய இளைஞர்கள் எங்கே சென்று கொண்டிருக்கிறார்கள்? வாழ்வின் திசைமாறி அல்லவா சென்று கொண்டிருக்கிறார்கள்? நான் இப்படி கூறுவதால், இங்குள்ளவர்கள் என்னைச் சினந்து கொள்ளக் கூடாது.

இங்கு அமர்ந்திருக்கும் நாமெல்லாரும் குமுக அக்கறை உள்ளதால்தான் இதைப் பற்றிப்பேசிக்கொண்டிருக்கிறோம். மற்ற கோடிக்கணக்கான இளைஞர்கள் இந்த தேசத்தின் தெருக்களிலே வீணானசிந்தனைகளுடன் அல்லவா சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்?

இந்திய இளைஞர்களின் இந்த இழி நிலைக்கு யார் காரணம்? உண்மையில் நாமன்று. திருப்பூர் குமரனுக்கும், வாஞ்சிநாதனுக்கும், பகத்சிங்குக்கும் இன்னும் இலக்கக்கணக்கான இளைஞர்களின் குமுகாய எழுச்சிச் சிந்தனைகளுக்கும் பேச்சு போட்டி வைத்தா அவர்களின் உணர்வுகளை எழுப்பிவிட்டோம்? தங்கள் தாய் நாட்டின்மீது அவர்களுக்கிருந்த தாளாத அன்பும், அவர்களின் அரத்தநாளங்களில் ஓடிய தேசிய உணர்வுமல்லவா இந்திய தேசத்தின் அடிமைத் தளையை அறுத்தெறிந்தது?

அன்றைய இளைஞர்களிடம் இருந்த தேசப்பற்று, குமுகாயச் சிந்தனை, மாந்த நேயம், இன்றைய இளைஞர்களிடம் இல்லையே ஏன்? தேசப்பற்றும் தெய்வீகச் சிந்தனையும், மாந்த நேயமும், மக்களிடையே அன்பும், உயர்வான உழைப்பும், ஒழுக்க நெறிகளும், கலைப் பண்பாட்டு மேன்மையும், சிறப்பும், நமக்கே உரிய வழி வழியான சொத்தல்லவா?

இவற்றை நம்மிடமிருந்து பிரித்த தீய ஆற்றல் எது? நமது உணர்வுகளில் ஊடுருவி, இன்று நமது தனித்தன்மையையே சீரழித்துக் கொண்டிருக்கும் நச்சுயிரி எது? அதைக் கண்டு பிடித்து இளைஞர்களிடமிருந்து முதலில் அதை அப்புறப்படுத்த வேண்டும். வீரத்தின் விளைநிலங்களாக நாட்டின் கருவூலங்களாகத் திகழ்ந்த நம் இளைஞர் பட்டாளம் எங்கே? விவேகானந்தர் கேட்ட நூறு இளைஞர்களை நாட்டின் எப் பகுதியில் இருந்தாவது உங்களால் கொண்டு வர முடியுமா? நான் சூளுரை(சவால்) விடுகிறேன் கொண்டுவர முடியாது.

எப்படி முடியும்? நமது இளைஞர்கள்தாம் இன்று வெறிமயக்கப் பொருள்களை இன்ப நுகர்வு ஆக்கி உலகத்தில் வாழ்வதாக எண்ணி தங்களையே மாற்றிக் கொண்டிருக்கின்றனரே.

திரைப்படம்(சினிமா) என்ற நச்சுயிரி இளைஞர்கள் அசைவுகளைக் கூடக் கட்டுப்படுத்தி இருக்கிறதே. இன்று அவர்கள் எல்லாம் நடிகர், நடிகைகளின் பின்னால் அல்லவா அணிவகுத்து நிற்கின்றனர்?

நாலாந்தர நடிகை கடித்த ஆப்பிள் பழத்தை இன்றைய இளைஞன் ஆயிரம் உருபாவுக்கு வாங்கும் அவலத்தை என்ன சொல்வது?

நாட்டுப்பற்று மிக்க இளைஞன் இன்று 'உடல் மண்ணுக்கு, உயிர் நடிகர், நடிகைக்கு' என்றல்லவா கூறிக்கொண்டிருக்கிறான்.

இந்த நாட்டின் மேன்மைக்கு உயிரீகம் செய்த இளைஞர் பட்டாளம் எங்கே? திரைப்படத்திற்காக, வெறி மயக்கப் பொருளுக்காக, அரசியலுக்காக, மதத்திற்காக, காதலுக்காக, காமத்திற்காகத் தன்னை அழித்துக்கொண்டிருக்கும் இன்றைய கூட்டம் எங்கே போகிறது?

இன்றைய இளைஞர்களின் இந்நிலைக்கு யார் காரணம்? உறுதியாக இளைஞர்கள் மட்டும் அல்லர். நம்மை ஆள்பவர்களும்தான்! நல்ல மேய்ப்பர்களாக அவர்கள் இல்லாத காரணத்தால் அல்லவா இந்த மந்தைகள் திசைமாறி சீரழிந்துவிட்டன.

வறுமைக்கு வழி கோலியது யார்? திருட்டுத்தனத்தைத் திட்டமிட்டு உருவாக்கியது யார்? கையூட்டுக்குக் காரணம் யார்? வேலை இல்லாத் திண்டாட்டத்தின் வேர்கள் எங்கிருந்து வளர்கின்றன? பெண்மை இழிவுக்கு வித்திட்டது யார்? ஆடம்பர மோகத்திற்கு அடிமையானது யார்? நாடு உலகஅரங்கின் ஒரு மூலையில் கூனிக்குறுகி அவமானப் பொருளாக உருவெடுக்ப் யார் காரணம்?

உறுதியாக இளைஞர்கள் மட்டுமல்லர். அரசியலில் ஆதாயம் தேடுவோரும், திரைப்படத்தால் ஆடம்பர வாழ்க்கை வாழ்வோரும், மதத்தைப் பயன்படுத்தி மன்னராக முயல்வோரும், வெறிப் பொருள் விற்று நல வாழ்க்கை வாழ்வோரும் முக்கிய காரணம். இந் நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தை இந்தக் கட்டத்தின் நிகழ்காலம் அழித்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவையே இன்னும் சில நாட்களில் இந்தக் கும்பல் அடமானம் வைத்துவிடும். இந்தியாவை இந்தக் கும்பலிடமிருந்து மீட்க வேண்டுமானால் முதலில் இளைஞர்களை திரைப்பட வெறியிலிருந்தும், வெறி மயக்கப் பொருள், அரசியல், மத வாதத்திலிருந்தும் மீட்க வேண்டும். இளைஞர்களை மீட்டெடுக்கும் இந்தப் பணியில் குமுக அன்பும் ஆன்ம வலிவும் உள்ள இளைஞர் சிலர் நாடு முழுவதும் சென்று பாதை தவறிச் செல்லும் இளைஞர்களை வாழ்க்கைப் பாதைக்குக் கொண்டு வரவேண்டும்.

இப்பணியில் ஈடுபடும் இளைஞர்கள் ஒளி மிகுந்த கண்ணினராயும், உறுதி கொண்ட நெஞ்சினராயும் இருக்க வேண்டும். இப்பணி ஓராண்டு, இரண்டாண்டுகளில் முடிவடையக் கூடியது அன்று. நூறாண்டுகள் ஆகலாம். தீய ஆற்றல்களால் நயவஞ்சகமாக வீசியெறியப்பட்ட நச்சு வித்துகள் இளைஞர்களின் உள்ளங்களிலிருந்து என்று அகற்றப்படுகின்றனவோ அன்றுதான் இளைஞர்கள் நாட்டின் எழுச்சிக்குப் பாடுபடுவர்.

—நன்றி: இளையதீபம்' நவ-'93.

வெற்றியும் தோல்வியும்!

வெற்றி: எப்பொழுதும் ஒரு விடையின் பகுதி.
தோல்வி: எப்பொழுதும் ஒரு சிக்கலின் பகுதி.

வெற்றி: எப்பொழுதும் ஒரு திட்டமுடன் இயங்கும்.
தோல்வி: எப்பொழுதும் பிறர் மன்னிப்பை வேண்டி நிற்கும்.

வெற்றி: எப்பொழுதும், 'நான் உங்களுக்காகச் செய்கிறேன்' என்று சொல்லக் கூடியதாக இருக்கும்.
தோல்வி: 'இந்த வேலை எனதில்லை'—என்று சொல்லக் கூடியதாக இருக்கும்.

வெற்றி: ஒவ்வொரு சிக்கலுக்கும் ஒரு தீர்வு காணும்.
தோல்வி: ஒவ்வொரு திட்டத்தையும் ஒரு சிக்கலாக்கிக் கொள்ளும்.

வெற்றி: ஒவ்வொரு வரண்ட பகுதிக் கருகிலும் ஒரு பசுமை நிலத்தைக் காணும்.
தோல்வி: ஒவ்வொரு பசுமை நிலத்தையடுத்தும் இரண்டு அல்லது மூன்று வரண்ட பகுதியைக் காணும்

வெற்றி: 'கடினமாக இருக்கும்; ஆனால் செய்ய முடியும்' என்னும் நம்பிக்கை கொண்டதாக இருக்கும்.
தோல்வி: "அது செய்ய முடிவதாக இருக்கலாம்; ஆனால் அது மிகக் கடினமானது" என்னும் மனப்பான்மை கொண்டதாக இருக்கும்.

சொல்லாய்வறிஞர் அருளி அவர்களின்

அரிய புதிய ஆராய்ச்சிப் படைப்பு!

தென்மொழியின் தொண்டு!

(இதழ் தொடக்கக் காலம் பற்றிய ஒரு மேற்பார்வை)

(தென்மொழி தொடங்கிய 1959-ஆம் ஆண்டில் ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் இருபத்தாறு அகவையில், இருந்த இளமைத் தோற்றப் படம் அட்டையில் மிளிர்கிறது)

பக்கங்கள்: 90 விலை: உருவா. 12.

அறிவன் பதிப்பகம்
"தனித் தமிழ் மனை" "தமிழூர்"
காளிக்கோயில் தெரு, புதுவை—605009.

கதிரவன் மண்டிலத்தில் உலகத்தைப் போன்ற வேறு கோள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன" என்று கிளென் என்னும் அமெரிக்க அறிஞர் கூறியுள்ளார்.

O எய்ட்ஸ்' என்னும் பாலியல் நோய் இந்தியாவில் 10 இலக்கத்திற்கும் அதிகமான பேர்களிடம் பரவி உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

O இந்தியாவில் மொத்தம் 27 போலிப் பல்கலைக் கழகங்கள் செயல்பட்டு வருவதாகவும், அவற்றுள் தமிழகத்தில் மட்டும் 7 செயல்படுவதாகவும் அரசு குறிப்பு ஒன்று குறிப்பிடுகிறது.

O இந்தியாவில் 145 பல்கலைக் கழகங்கள், 26 பல்கலைக் கழகத் தகுதி பெற்ற கல்வி நிறுவனங்கள், 6,912 கல்லூரிகள் உள்ளன. அதே சமயத்தில், தமிழகத்தில் (1990—இன் விளக்கப் படி) 10 கல்வித்துறைப் பல்கலைக் கழகங்கள், 3 மருத்துவம், வேளாண்மை, கால்நடைத் துறைப் பல்கலைக் கழகங்கள், 2 கால்நடை மருத்துவக் கல்லூரிகள், 22 கல்வியியற் கல்லூரிகள், மீன் வளம், நுண்கலை, குமுகப்பணி இவை உள்ளிட்ட பிற வகைக் கல்லூரிகள் 22 ஆகியவை உள்ளன.

O தமிழகத்தில் இப்பொழுது அஃதாவது மலிவு மதுக் கடைகள் விலக்கிக் கொள்ளப்பட்டவுடன் 3,000 மேல் நாட்டு மதுக் கடைகள் உள்ளன.

O 92 மே மாத இடையில் உதகை மண்டலத்திற்கு மூன்று நாள்கள் உலா வரும் முதலமைச்சர் செயலலிதாவிற்காக, அவர் தங்கவிருக்கும் அரசு மாளிகை உருவா 60 இலக்கத்தில் புதுப்பிக்கப்பெற்றது. ஆனால் அவர் அங்கு செல்லவில்லை.

O பொதுமக்கள் பணத்தை அரசு அகாதமி விருதுகளுக்கு அளிக்கப்படுவதைத் தாம் ஏற்க விரும்பவில்லை என்று கூறி, எழுத்தாளர் எம்.சி. நாராயணன் என்பார், தமக்குக் கேரள அரசு கொடுத்த கேரள சாகித்திய அகாதமி விருதைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார்.

O இந்தியாவிலேயே முழுவதும் பெண்களே பணிபுரியும் காவல் நிலையம், முதன் முதல், சென்னை, ஆயிரம் விளக்குப் பகுதியில்தான், கடந்த சித்திரை(மேழம்)முதல்நாள் தொடங்கப் பெற்றது. இந்த மகளிர் காவல் நிலையத்தில் ஒரு பெண் ஆய்வாளர், 3 உதவி ஆய்வாளர்கள், 6 தலைமைக் காவலர்கள், 24 காவலர்கள் பணியில் இருப்பார்கள்.

O இந்தியாவின் பழைய கலைப் பண்பாடுகளுக்கு எடுத்துக் காட்டுகளாக உள்ள அஜந்தா, எல்லோரா குகைக் கோயில்கள் மகாராஷ்டிர மாநிலத்தில் ஈராயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்தன. இக் குகை கோயில்களை 1819-இல் ஆங்கிலேய அதிகாரிகள்தாம் முதன் முதலாகக் கண்டறிந்தனர்.

O இந்தியாவில், பலவகையாலும் உடல் உறுப்புக் குறைந்தவர்கள் ஏறத்தாழ 6 கோடிப் பேர்கள் உள்ளனர்.

O தமிழகத்தில் இப்பொழுது 205 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன.

O மடகாசுகர் தீவுக்கு அருகில் உள்ள மொரீசியசு தீவு 1507 முதல் 1968 வரை—ஏறத்தாழ 460 ஆண்டுகள் முறையே போர்ச்சுக்கல், டச்சு, பிரெஞ்சு, பிரிட்டீசு ஆளுமையிலிருந்து 1968 மார்ச்சு 12-இல் அது தன்னுரிமை (சுதந்திரம்) பெற்றது. பின்னர் அது கடந்த 24 ஆண்டுகளாக மேல் ஆளுநர் வீராசாமி ரெங்காடு ஆளுமையிலிருந்து சென்ற 1992 மார்ச்சு 11-இல் குடியரசு நாடாக ஆனது. ஆளுநரே முதல் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். மொரீசியசு நாட்டின் மக்களில் முக்கால் பகுதியினர் இந்தியர்.

சப்பானியரின் நீர்ப் பண்டுவம்.

மயிலாடுதுறை இயற்கை மருத்துவக் கழகம் அண்மையில் வழங்கிய ஓர் அறிக்கையில் 1.26கிலோ தூய தண்ணீரை ஒரே மூச்சில் குடித்தால், பல நோய்கள் தீரும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுவரை முழு நலமாக வாழ 5 வழிகளில் ஒரு நாளில் 2 மணி நேரத்திற்கு ஒரு முறை எட்டுக் குவளை நீரைக் குடிக்க வேண்டும் என்பது சொல்லப் பெற்று வந்தது. இப்பொழுது மயிலாடுதுறைக் கழகம் கூறுவது, சப்பான் உடல் நலிவுக் கழகம் செய்த ஆராய்ச்சியின் பயனான கருத்தாகும்.

பல நோய்களுள்ள அகவை முதிர்ந்த அன்பர்கள் இதனையும் செய்து பார்க்கலாம். தொடர்ந்து ஒரு மாதமாவது செய்தபின் இதன் நல்லது கெட்டதுகளைத் தெரிந்து கொள்ளலாம்.

இம் முறை கீழ்க்காணும் நோய்களுக்கு உள் மருந்தாகப் பரிந்துரை செய்யப் பெறுகிறது.

- தலைவலி, குருதியழுத்தம், சோகை, மூட்டுவலி (கீல்வாதம்) பொதுவான கை கால் வீழ்ச்சி (பாரிச வாதம்), கொழுப்பு மிகுதி(கொலாஸ்ட்ரல்), காதில் மணியடிப்பது போலும் ஒலி கேட்பு, சோர்வு, பருமன், நெஞ்சாங்குலைத் துடிப்பு மற்றும் பற்பல நோய்களுக்கும்,
- இருமல், ஈளை (ஆஸ்துமா), சளி, என்புருக்கி நோய்(காச-நோய்)
- மூளைக்காய்ச்சல், கல்லீரல் தொடர்பான நோய்கள்,
- வயிற்றில் அதிகப் புளியநீர்(அமிலம்) சுரத்தல், வயிற்றுப் பொருமல், வயிற்றுப் போக்கு, எருவாய்(ஆசன வாய்) வெளித் தள்ளுதல், மூலம், நீரிழிவு,

—முதலிய நோய்களுக்கும் தூய தண்ணீரைக் குடிப்பதன் மூலம் செய்யப்பெறும் 'நீர்ப் பண்டுவ முறை' பலரால் நம்புதற்கு இயலாமல் இருக்கலாம். எனினும் இந்த முறை சிறந்ததாகவும் பரிந்துரை செய்யப்படுவதாகவும் மெய்யாகி உள்ளது. ஒரே சமயத்தில் போதுமான தண்ணீர் அருந்துவது குடலில் புதிய நல்ல அரத்தத்தை உண்டாக்குவதற்கு உதவி செய்கிறது. இந்த முறை நாம் உட்கொள்ளும் உணவின் சாரங்களைத் தூய குருதி-யாக மாற்றுதற்கு வாய்ப்பளிக்கிறது. இந்த நீர்ப் பண்டுவ முறை விளக்கம் ஏழு ஆண்டுகளுக்கு முன் ஒரு மருத்துவப் பல்கலைக் கழகத்தின் சப்பானியப் பேராசிரியரால் எழுதப் பெற்ற கட்டுரையில் வெளியிடப்பெற்றுள்ளது.

அரிய விலங்குகளின் காப்பிடம்!

'யுனெசுகோ' தீர்மானத்திற்கிணங்க, கிழக்கு சைபீரியாவி-லுள்ள சயானோ—சுஷென்ஸ்கி என்னும் பைதரம், விலங்குகளின் காப்பிடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 40,000 அயிர மாத்திர் (சதுர கிலோ மீட்டர்) உள்ள இந்தப் பைதரம் வியத்தகு விலங்கு-களுக்கான காப்பிடமாக விளங்குகிறது; இதிலுள்ள பல வியத்தகு விலங்குகள் அனைத்து நாட்டுச் தேச சிவப்புப் பொத்தகத்தில்" இடம் பெற்றுள்ளனவாம்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005; (தமிழகம்)